# சங்க இலக்கியங்கள் கூறும் அறக்கருத்துக்கள்

***முனைவர் சு. செல்லம்மாள்***
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
பாலகன் சரஸ்வதி கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி
முக்கூடல், திருநெல்வேலி மாவட்டம்

***முனைவர் அ. பாக்கியமுத்து***
இணைப் பேராசிரியர் மற்றும் தமிழ்த்துறைத் தலைவர்
திருவள்ளுவர் கல்லூரி, பாபநாசம், திருநெல்வேலி

**மலர்: 12**

**சிறப்பிதழ்: 1**

**மாதம்: மே**

**வருடம்: 2025**

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/10.34293/sijash.v12iS1-May.8970

## முன்னுரை

சங்க இலக்கியங்கள் பண்பாட்டையும் நாகரிகத்தையும் அள்ளித்தரும் அரிய களஞ்சியங்களாகும்.அவை பண்டைத் தமிழர்களின் வாழ்க்கை முறைகள் குறித்த தகவல்களை நாம் அறிந்து கொள்ளச் செய்வதோடு மக்கள் வாழவேண்டிய நெறி முறைகளை அறிவுறுத்துவனவாகவும் அமைகின்றன. மொழி வழிபட்ட எந்தவொரு சமுதாயமும் இலக்கிய ஆக்கங்களின் வழியாகவே தம் சமுதாயத்தின் கடந்தகால வரலாற்றை பண்பாட்டை நாகரிகத்தை பதிந்து வைத்துக் காக்கின்றன. இந்நிலையில் பண்டைய தமிழ்ச் சங்கத்தை மீளுருவாக்குவதற்கான சான்றுகளாக விளங்கும் சங்க இலக்கியங்கள் தாம் எழுந்த சமுதாயத்தை நம்முன் நிறுத்துவனவாக உள்ளன.

## இல்லற வாழ்க்கை

நம் பண்பாட்டை தலைசிறந்து விளங்குவது இல்லற வாழ்க்கையாகும். இன்று வாழ்க்கைக்கு அர்த்தம்புரியாமலே வாழ்ந்து கொண்டிருப்போர் பலர். ஆனாலும் சங்க இலக்கியங்கள் வாழ்க்கை என்பதற்கு இலக்கணம் வகுத்துக் கொடுக்கின்றன.

ஓர் ஆடையைப் பகுத்து உடுத்தும் வறுமை நிலையிலும் மனம் ஒன்றி வாழும் வாழ்க்கைச் சிறப்பினை,

**ஒன்றன் கூறாடை யுடுப்பவரே யாயினும்**
**ஒன்றினார் வாழ்க்கையே வாழ்க்கை** (கலி.1.8)

என்னும் கலித்தொகை வரியால் அறியலாம். மனம் ஒத்த அன்பே இல்லற வாழ்க்கையின் அடிப்படை. இதனால்தான் அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ்? என்றும் அன்பின் வழியது உயிர்நிலை என்றும் கூறினார் வள்ளுவப் பெருந்தகை.

கணவனும் மனைவியும் ஒற்றுமையோடு இறுதிவரையும் வாழ்ந்தாலே வீடுபேறு தானாக வந்தெய்தும் என்பது தமிழரின் கொள்கையாக இருந்தது. ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து வாழும் வாழ்க்கைதான் அன்புகலந்த வாழ்க்கை. கணவன் தன்னைவிட அறிவும் மதிப்பும் பெருமையும் அதிகமாக கொண்டிருக்க வேண்டும். ஆனால் தன்னிடத்தில்அன்புவைத்திருக்கவேண்டும் என்பதையே விரும்புவாள் இதனை

**இம்மை மாறி மறுமை ஆயினும்**
**நீ யாகியர் எம் கணவனை**
**யான் ஆகியர் நின் நெஞ்சு நேர்பவளே**
**(குறந்தொகை)**

என இப்பிறவி நீங்கி மறுபிறவியிலும் நீரே என் கணவராக வர வேண்டும். அப்போதும் உம் நெஞ்சத்தில் நான் முழுமையாக இடம் பெற வேண்டும் என்று கூறுகையில் மனைவி கணவன் தன்மீது அன்பு கொண்டிருக்க வேண்டும் என ஏங்குவது நமக்கு புலனாகிறது.

**பொருளீட்டல்**

“பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை” என்பது திருக்குறள். வாழ்க்கைக்கு இலக்கணம் கற்றுக் கொடுக்க சங்க இலக்கியம் வாழ்க்கைக்கு தேவையானப் பொருளை ஈட்டும் வழிமுறைகளையும் சொல்லிக் கொடுக்கிறது. திருமணத்திற்கு முன் ஒருவனுக்குச் செலவும் பொறுப்பும் தொடர்பும் குறைவு. திருமணம் என்ற கட்டுக்குள் வந்தபின் எல்லாமே பெருகி விடுகின்றன. புகழ்பெற வேண்டும் முன்னுக்கு வரவேண்டும் என்ற எண்ணங்கள் மலர்கின்றன.

இல்லறத் தலைவன் பொருளீட்ட வேண்டும் என்பது தவிர்க்க முடியாதது ஆகும். தன் குடும்பத்தையும் உறவினரையும் பாதுகாக்கப் பொருள் வேண்டும். பொருள் இல்லையெனில் நண்பர்கள் நெருங்க மாட்டார்கள். அருகிலுள்ளோர் செல்வம் ஈட்டி வந்த வளமாக வாழ்வதைப் பார்த்துப் பொறாமை ஏற்படும். இவ்வாறு சிந்தித்துப் பார்த்து தலைவன் இகழ்ச்சியையும் புகழ்ச்சியையும் ஒப்பிட்டுப் பார்த்து உடனே பொருளீட்ட நாடு கடந்து நெடுந்தொலைவு செல்லுகின்றான். இதனை

**நட்டோ ரின்மையும் கேளிர் துன்பமும்**
**ஒட்டா துறையுநர் பெருக்கமும் காணூஉ**
**ஒருபதி வாழ்தல் ஆற்றுப தில்லை**
**பொன்னவிர் சுணங்கொடு செறிய வீங்கிய**
**மென்முலை முற்றம் கடவா தோர்**
**(அகம்.279)**

என்னும் பாடலடிகள் மெய்ப்பிக்கும்.

மேலும் முன்னோர் ஈட்டிய செல்வத்தைக் கொண்டு இன்பமாகக் காலங்கழிப்பவரைச் சங்க நெறிகள் போற்றவில்லை. இன்பம் துய்த்தாலும் சரி ஈகை செய்தாலும் சரி தாம்தாம் ஈட்டிய பொருளிலிலுருந்தே வாழ்க்கை நடத்துதல் வேண்டும்.

**ஈகை**

பொருள் ஈட்டினால் மட்டும் போதாது. ஈட்டிய அச்செல்வத்தைப் பிறருக்கும் கொடுத்து வாழ்தல் வேண்டும். பெருஞ்செ ல்வத்தை உடையவன் அதனைத் தக்கவர்க் குக் கொடுத்தல் வேண்டும். பொருள் உடையவர்க்குக் கொடுப்பதில் எவ்வித பயனும் இல்லை. இதனை

**முட்டில் பெரும் பொருள் ஆக்கியகால் மற்றது**
**தக்குழி ஈதல் இனிது**
**(இனி.நா.19)**

என்னும் பாடலடிகள் விளக்கும்.

உலகில் உள்ள செல்வந்தர்கள் பலரும் செல்வத்தைப் பரிசிலர்க்கும் வழங்குவது இம்மையில் புகழும் மறுமையில் துறக்க இன்பமும் பெற வேண்டும் என்னும் கருத்திலேயாகும். ‘ஆய் ஆண்டிரன்’ என்னும் மன்னன் அத்தகைய எண்ணில்லாதவன். அவன் கொடைச் செய்கை அறநெறிக் குட்பட்டதாகும்.

**இம்மைச் செய்தது மறுமைக்கு ஆம் எனும்**
**அறவிலை வணிகன் ஆய் அல்லன்**
**பிறரும் சான்றோர் சென்றநெறி என**
**ஆங்குப் பட்டன்று அவன் கைவண்மையே**
**(புறம். 134)**

இதன் மூலம் இப்பிறப்பில் செய்த அறம் மறுபிறப்பில் உதவும் எனக்கருதி பொருளை விலையாகக் கொடுத்து அதற்கு ஈடாக அறம் கொள்ளும் வணிகன் 'ஆய்' அல்லன் என்பது விளக்கப்படுகிறது.

**விருந்தோம்பல்**

சங்ககால மக்கள் ஈதலையும் விருந்தோம்பலையும் இரு கண்களாக கருதி அவற்றை வாழ்வில் பின்பற்றி வந்தனர். அவர்கள் அளவிறந்தப் பொருளை வரும் விருந்தினர்க்குப் பகுத்துக் கொடுத்து வாழும் இயல்புடையோர். அவர்கள் வரும் விருந்தினரை வரவேற்று உணவு சமைத்து உபசரித்ததை

**திருவுடை வியல்நகர் வருவருந்து அயர்மார்**

என்று விரும்பிப் போற்றும் விருந்தினரை இன்முகம் கொண்டு வரவேற்று அவர்களுக்கு இனிய உணவை ஆக்கி விருப்பத்துடன் விருந்துபடைத்தனர்.தலைவிவிருப்பமுடன் விருந்து படைத்ததை

**விருந்து அயர் விருப்பினர் (நற் - 374)**

என நற்றினை கூறுகிறது. விருந்தினர் இரவு நேரங்களில் வந்தால் கூட அவர்களைப் பாதுகாப்பதற்கும் விருந்து படைப்பதற்கும் தயங்கியதில்லை.

**இல்லிலாயினும் விருந்து வரின் உவக்கும்**
**முல்லைச் சான்ற கற்பின்**
**மெல்லியல் குறுமகள் உறைவின் ஊரே**
**(நற்.142)**

என்று தலைவன் தன் மனைவியின் விருந்தோம்பல் பாங்கினை நினைத்து உள்ளம் மகிழ்கிறான். மேலும் விருந்தினர் உண்டபின் எஞ்சிய உணவையே மகிழ்வுடன் உண்டனர். இதனை

**விருந்து உண்டு எஞ்சிய மிச்சம் பெருந்தகை**
**நின்னொடு உண்டலும் புரைவது**
**(கு.பா. 206 - 207)**

என்னும் அடிகள் மூலம் அறியலாம்.

**சுற்றம் பேணல்**

பணம் இருந்தால் சொந்தபந்தங்கள் மட்டுமல்லாமல் அனைவரும் நம்மோடு நட்புப் பாராட்டுவர். பணமின்றி ஏழ்மை வயப்பட்ட போது சொல்லிக் கொள்ளச் கூட உறவுகள் இல்லாமல் போய்விடும். ஆனால் பழந்தமிழகப் பாணர்கள் தாங்கள் வறுமை உற்றிருந்த காலத்திலும் தம் சுற்றத்தோடு வாழ்ந்து வந்தனர். பொருநன் பாடினியுடனும் சிறுபாணன் விறலியுடனும் கூத்தன் பாணன் முதலிய கலைச் சுற்றத்துடனும் வாழ்ந்து வந்தனர். பசியால் வருந்திய சுற்றத்தை வழிநடத்திச் செல்கிறான் சிறுபாணன்.

**இவண் நயந்திருந்த இருப்பேர் ஒக்கல்**
**செம்மல் உள்ளமோடு செல்குவீராயின**
**(சிறுபா. 144-145)**

என்பதில் வறுமையுற்ற காலத்தில் அவர்களைப் பேணிப் பாதுகாத்து அழைத்துச் செல்லும் பண்பு வெளிப் படுகின்றது.

**உயிர்கள் மீது இரக்கம் கொள்ளல்**

இன்றைய காலகட்டத்தில் மனிதநேயம் என்பது பெயரளவிலேயே இருக்கின்றது. மனிதனை மனிதனாக வாழச்செய்யும் அன்பு கருணை இரக்கம் போன்றவை இன்று மக்களிடம் குறைந்து வருகிறது. புணீற உயிர்களையும் தன்னைப்போல் கருதும் பரந்த மனப்பான்மை பொதுநலப்பார்வை போன்றவை அத்தனை சிறப்புடையதாக இல்லை. வழியில் எவரேனும் அடிபட்டுக் கிடந்தால் வழியில் செல்வோர் நமக்கு ஏன் வம்பு என்று சொல்லி அவ்விடத்தை விட்டு அகன்று விடுதல் வழக்கமாகிவிட்டது. தன்னலத்துக்காக பிற உயிர்களை வருத்தி வாழும் போக்கத்தான் இன்று வளர்ந்து வரும் அறிவியலுலகில் பெருகி வருகின்றது.

சங்க இலக்கியம் மனிதநேயத்தின் உச்ச நிலையைக் காட்டுகின்றது. அஃறிணை உயிர்களில் எறும்பும் வண்டும் புழுவும் பூச்சியும் பறவையும் விலங்கும் துன்பப்படாது பண்டைத்தமிழ் மக்கள் பாதுகாக்க செயலைக் காணும்போது உயர்திணையாகிய மனிதர்களை அக்காலத்தில் எப்படிப் காத் திருப்பர் என்பதை நம்மால் உய்த்துணர முடியும்.

**பூத்த பொங்கர்த் துணையொடு வதிந்த**
**தாதுண் பறவை பேதுற லஞ்சி**
**மணிநா ஆர்த்த மாண்வினைத் தேரன்**
**(அகம்.4)**

என்று தலைவன் தேரூர்ந்து வரும் வழியில் சோலையில் வண்டுகள் மலரின் தாதுண்பது இடையூறுபடாமலிருக்கத் தன் தேரின் மணிகளை ஒலி எழுப்புவாறு அவற்றின் நாவைக் கட்டிவிடுகிறானாம்.

**பழிவாங்களுக்கு அஞ்சுதல்**

மக்கள் பழிபாவங்களுக்கு அஞ்சிவாழும் போது சமுதாயத்தில் குற்றங்கள் குறையும். இதைக் கடைப்பிடித்தவர்கள் சங்கச் சான்றோர்கள். மன்னர்களும் குடிமக்களின் பழிக்கு ஆளாகாமல் வாழவேண்டும் என்ற கொள்கையுடையவர்களாக இருந்துள்ளனர். பாண்டியன் அறிவுடை நம்பி மக்களின்மீது அதிகவரி விதிக்க வரிச்சுமை கண்ட பிசிராந்தையார் வரியை குறைவாக முறையாக அமைத்தால் மக்கள் பயன் பெறுவது இல்லையேல் நாடு சீரழியும் என்பதை

**வரிசை யறியாக் கல்லென் சுற்றமொடு**
**பரிவுதப வெடுக்கும் பிண்ட நச்சின்**
**யானைபுக்க புலம் போலத்**
**தானு முண்ணா னுலகமும் கெடுமே**
**(புறம்.184)**

என்கிறார்.

**கல்வி**

கல்வியின் மகத்துவத்தை நன்கு உணர்ந்தவர்கள் சங்கச் சான்றோர்கள். கல்வியானது தாயின் மனதையும் மாற்றும் ஆற்றல் பெற்றது. ஒரு குடியில் பிறந்தோருள்ளும் மூத்தோனுக்கு மதிப்பளிக்காது அறிவுடையவனையே அரசனும் சிறப்பளிப்பான்.

**ஒருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளும்**
**மூத்தோன் வருக வென்னா தவருள்**
**அறிவுடை யோனா றரசுஞ் சொல்லும்**
**(புறம்.183)**

என்ற ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் கல்வியின் சிறப்பினைப் போற்றியுள்ளான். நிறைவாக சங்ககாலம் பண்பாட்டில் வளர்ச்சிபெற்ற அக வாழ்க்கையிலும் புற வாழ்க்கையிலும் நிறைவு பெற்றகாலம். அன்றைய வாழ்வியல் பண்பாடு போற்றத்தக்கது மட்டுமல்ல இன்றைய வாழ்வுக்கு வழி காட்டியாகவும் எதிர்கால வாழ்வை வளமுடையதாக்கவும் பயனுடையதாக்கவும் வல்லது.

**பார்வை நூல்கள்**

1. முனைவர். ச. பாரிஜாதம் இலக்கியச் சாரல்
2. பே.மாதையன் சங்க இலக்கியத்தில் குடும்பம்
3. முனைவர் சு. ஜெயக்குமாரி சங்கச் சாரல்
4. முனைவர். சு. ஜெயக்குமாரி. செல் விலக்கியங்களில் மனிதநேயச் சிந்தனைகள்.